2002 அக்டோபர் 29]

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, வரும் நிதி ஆண்டிலேயாவது கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடுக்கன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தொடர்ந்து 3 ஆண்டுகள் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அது இலாபத்திலே இயங்குகிற நேரத்திலே உறுப்பினருடைய கோரிக்கையை அரசு யோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 58. திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

58—

விவசாயிகளுக்கு நிவாரணம்

***17918—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை மற்றும் அதனைச் சார்ந்த விவசாய மக்கள் (2002-ல்) சமீபத்தில் ஏற்பட்ட மழையினால் பாதிக்கப்பட்டதால், அவர்களுக்கு நிவாரணம் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். 2002 பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் பருவம் மாறிப் பெய்த கன மழையால் சேதமடைந்த நெல் மற்றும் இதர பயிர்களுக்காக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும் மற்றும் இதர சேதாரங்களைச் சீர்செய்யவும் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு ரூ.49 கோடி இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து

அரசு வழங்கியுள்ளது. மயிலாடுதுறை வட்டத்திலே 116 கிராமங்களிலே நெல் பயிரிட்ட 15,084 விவசாயிகளும், பருப்பு வகைப் பயிர்கள் பயிரிட்ட 13,263 விவசாயிகளும் பாதிப்பிற்குள்ளானார்கள். நெல் 5413.63.0 ஹெக்டேர் பரப்பிலும், உளுந்து போன்ற பருப்பு வகைப் பயிர்கள் 9564.99.0 ஹெக்டேர் பரப்பிலும் பாதிப்படைந்துள்ளன. இவ்வட்டத்தில் பாதிக்கப்பட்ட, நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.1,35,46,288/-ம், உளுந்து போன்ற பருப்பு வகைப் பயிர்கள் பயிரிட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.57,38,994/-ம் முதன்மை விவசாயக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில்களைத் தந்த அமைச்சர் அவர்களுக்கும், நிவாரண உதவி தந்த தமிழக அரசுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கேள்வி, பருவம் தவறிப் பெய்த மழையினால் வந்த பாதிப்புகளுக்காகக் கேட்கப்பட்ட கேள்வி, அதன் பிறகு வறட்சி, அதன் பிறகு கர்நாடக காங்கிரஸ் காவிரியில் தண்ணீர் தர மறுத்ததால் வந்த விளைவு; இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றங்களாலும், செயற்கையாக கர்நாடக காங்கிரஸ் அரசு போட்ட முட்டுக்கட்டையாலும் என்னுடைய தொகுதி விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த நிவாரணத் தொகை வழங்குகிறபோது, சரியாகக் கணக்கு எடுக்கப்படாமல் எங்கள் பகுதியில் பல்வேறு போராட்டங்கள் நடந்தன. அகரகிரிவுடை என்ற பஞ்சாயத்திலே தலைவர் உள்ளிட்ட, ஆளுங்கட்சி உள்ளிட்ட அத்தனை கட்சிக்காரர்களும், நிவாரணத் தொகை போதவில்லை என்றும், சரியான கணக்கு எடுக்கவில்லை என்றும் சொல்லி, அந்தக் குறைபாடுகளும் அப்போது இருந்தன. வட்டாட்சியரும், கோட்டாட்சியரும் நேரில் விசாரித்து, குறைகளைத் தீர்வு செய்வதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கணக்கெடுப்பிலே விடுபட்டவர்களுக்கு மீண்டும் நிவாரணத் தொகை கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை வட்டத்திலே மொத்தம் 116 கிராமங்கள் உள்ளன. நெல் பயிரிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளை,

2002 அக்டோபர் 29]

ஆங்காங்கே இருக்கக்கூடிய வருவாய்த் துறை அலுவலர்கள் மூலமாகவும், வேளாண்மைத் துறை அலுவலர்கள் மூலமாகவும் தீர விசாரித்து, அவர்களுடைய பட்டாக்களை எல்லாம்—அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுடைய கூட்டங்களை எல்லாம் கூட்டி—பார்த்து அந்த அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவரையிலே யாருக்கும் நிவாரணம் கொடுக்கவில்லை என்ற குறை அங்கிருந்து வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 59, திரு. கே.என். சேகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

59—

புதிய வட்டம்

***18749—திரு. கே.என். சேகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. கே.என். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலுமே ஒரு தாலுகா அலுவலகம் இயங்கி வருகிறது. ஆனால் திருவெறும்பூர், திருச்சி-1, திருச்சி-2 ஆகிய இந்த மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரே தாலுகாவாக, பெரிய தாலுகாவாக திருச்சி தாலுகா அலுவலகம் இயங்கி வருகிறது. திருவெறும்பூர் தொகுதியைப் பொறுத்த வரையில், 24 ஊராட்சிகள், மூன்று பேரூராட்சிகள், திருச்சி மாநகராட்சியின் 60 வார்டுகளில் 12 வார்டுகள் அடங்கிய மிகப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS